1630

அகஸ்தியர்
இலக்கண வினவிடை.

தூத்துக்குடி,
கால்டுவெல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதரும்,
மதுரைத் தமிழ்ச்சங்கத்து அங்கத்தினருள் ஒருவருமாகிய,
J. G. சுந்தரம் அவர்கள்,
எழுதியது.

...OF THE REGI...
No. ...
6 MAR 1931

A. V. D. பாக்கியம் பிள்ளை,
...க்கக வர்த்தகர், தூத்துக்குடி.
1931.

[விலை 2 அணா

CH
P31
N31
120497

அகஸ்தியர்
இலக்கண வினுவிடை.

இளைஞர்களுக்கென்று வினு விடை ரூபத்தில்
இயன்றது.

தூத்துக்குடி,
கால்டுவேல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்,
J G. சுந்தரம் அவர்கள்,
இயற்றியது.

A. V. D. பாக்கியம் பிள்ளை,
புத்தக வர்த்தகர், தூத்துக்குடி.
1931.

[ரிஜிஸ்தர் செய்தது.] [விலை 2 அணு

-600 00
170497

பொருளடக்கம்.

பொருள்.		பக்கம்.
I.	எழுத்தியல்	1
II.	சொல்லியல்	10
	1. பெயர்ச்சொல்	10
	2. வினைச்சொல்	18
	3. இடைச்சொல்	24
	4. உரிச்சொல்	25
III.	புணரியல்	26
IV.	சொற்றொடரியல்	28

அகஸ்தியர்
இலக்கண வினாவிடை

மேதினிக் கண்தமிழ் மேம்பா டுடைய
ஆதியி லிலக்கண மருளிய
சோதி யகத்தியன் துணைகொள் வோமே.

1. இலக்கணம் என்ற சொல்லின் பொருள் என்ன?

அழகு, அலங்காரம், அடையாளம், என்று பொருள்படும்.

2. தமிழ் இலக்கணம் என்பது யாது?

தமிழ்ப் பாஷையின் அழகும், அலங்காரமும் பொருந்திய பல நற்குணங்களையும், அவற்றை இனம் அறிந்துகொள்ளும் அடையாளங்களையும் விதிமுறையில் தெரிவிக்கும் நூல்.

3. தமிழ் இலக்கணம் கற்பதனால் பயன் என்ன?

நாம் நமது பாஷையைச் செம்மையாகப் பேசலாம், பிழையில்லாமல் எழுதலாம், நாமும் செந்தமிழ் நூல்கள் செய்யலாம்.

4. தமிழ் எழுத்துக்களை யெல்லாம் எழுது.

ஆய்தம். ஃ

உயிர் 12

உயிர்மெய் — 216.

மெய் 18	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க் +	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங் +	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச் +	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ் +	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட் +	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண் +	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த் +	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந் +	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப் +	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம் +	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய் +	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர் +	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல் +	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ் +	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ் +	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள் +	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற் +	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன் +	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

5. எழுத்துக்களுக்கெல்லாம் முதல் எழுத்து எது ?

'அ' என்பதே முதல் எழுத்து.

6. 'அ' முதல் 'ஔ' வரை எத்தனை எழுத்துக்கள் ?

12 எழுத்துக்கள்.

7. 'ஔ' என்றதன் பக்கத்தில் அடைபட்டிருக்கும் எழுத்து எது.

ஃ என்ற எழுத்து.

8. க் முதல் ன் வரை உள்ள புள்ளி எழுத்துக்கள் எத்தனை ?

18 எழுத்துக்கள்.

9. க முதல் னௌ வரையிலுள்ள எல்லா எழுத்துக்களையும் எண்ணிக் கூறு :

216எழுத்துக்கள்.

10. எனவே, தமிழ் எழுத்துக்களை எத்தனைவகைகளாகப் பிரிக்கலாம் ? அவை எவை ? எத்தனை ?

4 வகைகளாகப் பிரிக்கலாம், அவை

1. உயிர் எழுத்து 12.
2. மெய்யெழுத்து 18.
3. உயிர் மெய்எழுத்து. 216.
4. ஆய்த எழுத்து 1.

ஆக மொத்த எழுத்துக்கள் 247.

11. உயிரெழுத்தென்ருல் என்ன ? எவை ?

வேறு எழுத்துக்களின் உதவியில்லாமல் தானே ஒலிக்கக்கூடிய எழுத்து உயிர் எழுத்தாம். அவை, அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, ஆகிய இப்பன்னிரண்டுமாம்,

12. உயிர் எழுத்துக்களை உச்சரித்துக், குறைந்த ஓசையுடைய அல்லது குறுகி ஒலிக்கக்கூடிய எழுத்துக்களைக் காட்டுக.

அ, இ, உ, எ, ஒ, இவ் வைந்தும் குறுகிய ஓசையுடையது. ஆகையால் இவை குற்றெழுத்துக்கள்.

13. நீளமான ஓசையுடைய அல்லது நெடியதாக உச்சரிக்கக்கூடிய எழுத்துக்களைக் காட்டுக.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, இவ்வேழும் நெடிய ஓசையுடையது. ஆகையால் இவை நெட்டெழுத்துக்கள்.

14. பெயர்களைச் சுட்டிக் காட்டும்படி முன்வரும் எழுத்துக்கள் எவை ?

அ, இ, உ, இம்மூன்றும் பெயர்களின் முன் நின்று சுட்டும். ஆகையால் இவை சுட்டெழுத்துக்களாம்.

உ—ம்	அவன்	அக்குதிரை
	இவன்	இக்குதிரை
	உவன்	உக்குதிரை

அவ்வீடு—தூரத்திலுள்ள வீடு சுட்டியது ‘அ’
இவ்வீடு—சமீபத்திலுள்ள வீடு சுட்டியது ‘இ’
உவ்வீடு—இடையிலுள்ள வீடு சுட்டியது ‘உ’

15. கேள்விப் பொருளைத் தரும்படி அதாவது வினுவின்பொருட்டு வரும் உயிரெழுத்துக்கள் எவை?

ஆ, எ, ஏ, ஓ, இந்நான்கும் வினுவெழுத்தாம். ‘யா’ என்னும் உயிர்மெய் எழுத்தும் வினுவெழுத்து.

உ–ம் இராமனு? ‘ஆ’ வினு ஈற்றில் வந்தது.
நானே? ‘ஓ’ ,, ,,
ஏது? ‘ஏ’ வினு முதலில் வந்தது.
எவன்? ‘எ’ வினு ,, ,,
யாது? யாவன்? ‘யா’ வினு ,, ,,

16. ஆக உயிரெழுத்துக்களை எவ்வாறு எத்தனை விதமாகப் பிரிக்கலாம்?

1. குற்றெழுத்து 3. சுட்டெழுத்து
2. நெட்டெழுத்து 4. வினுவெழுத்து
என நான்காகப் பிரிக்கலாம்.

17. மெய்யெழுத்தென்றால் என்ன? எவை?

உடல் அல்லது மெய்போல் நின்று உயிரெழுத்தோடு சேர்ந்தாலன்றித் தானே ஓசை கொள்ளமாட்டாத எழுத்து மெய்யெழுத்து.

அவை—க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன், இப்பதினெட்டுமாம்

18. மெய்யெழுத்து எத்தனை வகைப்படும்? எவ்வாறு?

மூன்று வகைப்படும். அவை,

1. வல்லெழுத்து
2. மெல்லெழுத்து
3. இடையெழுத்து

1. வல்லெழுத்தாவன—க், ச், ட், த், ப், ற்.
இவை வல்லினம், வன்கணம் எனப்படும்.

2. மெல்லெழுத்தாவன—ங், ஞ், ண், ந், ம், ன்.
இவை மெல்லினம், மென்கணம் எனப்படும்.

3. இடையெழுத்தாவன—ய், ர், ல், வ், ழ், ள்,
இவை இடையினம், இடைக்கணம் எனப்படும்

19. உயிர்மெய் எழுத்து என்பது யாது?

உயிரும் மெய்யும் கூடி ஒலிக்கும் எழுத்து உயிர்மெய் எழுத்து. உதாரணமாக 'ப' என்ற இவ்வெழுத்தை ஓசை கூட்டி உச்சரித்துப்பார் 'ப்' என்ற மெய்யின் ஒலியும், 'அ' என்ற உயிரின் ஒலியும் சேர்ந்து ஒலிப்பதைக் கவனி. எனவே 'ப' என்பது ஓர் உயிர்மெய் எழுத்து.

20. உயிர்மெய் எழுத்துக்கள் எத்தனை? அவை எவ்வாறு பிறக்கும்?

உயிர் பன்னிரண்டும் பதினெட்டு மெய்யெழுத்துக்களோடும் தனித் தனியே சேர்வதால்

(12 × 18) = 216 உயிர்மெய் எழுத்துக்கள் பிறக்கின்றன.

க் + அ = க, க் + ஆ = கா, க் + இ = கி, எனச்சேரும்.

இவ்வாறு 'க' முதல் 'னௌ' ஈறாயுள்ள உயிர்மெய்கள் 216 பிறக்கும்

21. *உயிரும் மெய்யும் கூடிப்பிறக்கும் உயிர்மெய்யெழுத்துக்களையெல்லாம் எத்தனை வகைளாகப் பிரிக்கலாம்? அவை எவை?*

1. உயிர்மெய்க் குற்றெழுத்து
2. ,, நெட்டெழுத்து
3. ,, வல்லினம்
4. ,, மெல்லினம்
5. ,, இடையினம்

என ஐந்து வகைளாகப் பிரிக்கலாம் அவைகளைப் பிரித்து எழுதிக் கண்டுகொள்க.

குறிப்பு.—உயிர்மெய் எழுத்துக்களில் சுட்டெழுத்து இல்லை.

வினாவெழுத்து ஒன்று உண்டு அது 'யா' அல்லவா?

22. *ஆயுத எழுத்து என்பது யாது? என்?*

உயிர்மெய் போலும் மெய்போலும் ஒலித்து உயிருமாகாமல், மெய்யுமாகாமல் தனி நிலையாக வரும் மூன்று புள்ளிகளையுடைய ஃ என்னும் எழுத்து ஆய்த எழுத்தாம். இது ஒருவகை ஆய்

தம்போல் எழுதப்படுதலால், ஆய்த எழுத்து எனப்பெயர் பெற்றது. தனிக் குற்றெழுத்துக்கும் உயிர்மெய்க்கும் இடையில் இது சொல்லில் வரும்.

உ-ம் அஃது, எஃகு, இஃது.

23. இன எழுத்துக்கள் என்பன எவை? என்?

ஒன்றிற்கொன்று அமைப்பினாலாவது, ஓசையினாலாவது சம்பந்தமுடைய எழுத்தே இன எழுத்து எனப்படும்.

1. குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் ஓர் இனம்.

2. வல்லெழுத்தும் அதன் அயலுள்ள மெல்லெழுத்தும் ஓர் இனம்.

3. இடைத்து ஆறும் ஓர் இனம்.

1. அ, ஆ | இ, ஈ | உ, ஊ | எ, ஏ | ஐ,(இ) ஒ, ஓ | ஔ(உ) | .

'ஐ' ஓசை கூடும்பொழுது 'இ' என்பதன் ஓசையும், 'ஔ' ஓசை கூடும்பொழுது 'உ' என்பதன் ஓசையும் எழும்புவதைக் கவனி. குறிலுக்கு இனமான நெடில் பின் நின்றது பார்.

2. க, ங | ச, ஞ | ட, ண | த, ந | ப, ம | ற, ன |

ஒவ்வொரு வல்லெழுத்தின் இனமான மெல்லிய ஓசையுள்ளது அடுத்து வைக்கப்பட்டிருக்கிறதை கவனி.

3. ய, ர, ல, வ, ழ, ள.

இவையாறும் இடைப்பட்ட ஒரே ஓசையுடையது. ஆகையால் ஓர் இனமாகச் சேர்த்திருப்பதைக் கவனி.

24. மாத்திரை என்பது யாது?

ஒரு கைநொடிப்பொழுதும் ஒரு கண் இமைக்கும் நேர அளவும் ஒரு மாத்திரை நேரமாம். இது எழுத்துக்களின் ஓசையை ஒழுங்குபடுத்தும்படி ஏற்பட்ட ஓர் கால அளவு.

25. பல்வகை எழுத்துக்கும் ஏற்பட்ட மாத்திரை தனித்தனியே எவ்வளவு?

குற்றெழுத்து	1	மாத்திரையளவு.
நெட்டெழுத்து	2	,,
(மெய்) ஒற்றெழுத்து	$\frac{1}{2}$	,,
ஆய்தவெழுத்து	$\frac{1}{2}$	,,

26. எழுத்துக்கள் தமக்கு ஏற்பட்ட அளவைக் கடந்து ஒலிப்பது எப்பொழுது?

1. சங்கீதம் பாடும்பொழுது நீண்டு ஒலிக்கும்.
2. அழுது புலம்பும்பொழுது ,, ,,
3. பண்டம் விற்கும்பொழுது ,, ,,
4. கூப்பிடும்பொழுது ,, ,,

27. வடமொழி அல்லது சமஸ்கிருத பாஷையிலிருந்து தமிழில் வந்து வழங்கும் எழுத்துக்கள் எவை?

ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ, இவ்வைந்துமாம்.

II, சொல் அதிகாரம்.

28. சொல்லாவது என்ன?

ஒரு எழுத்தே நின்றாவது, பல எழுத்துக்கள் சேர்ந்து நின்றாவது, பொருள் தருமாயின், அது சொல் எனப்படும்.

ஒரே எழுத்தாலான சொற்கள்.—

வா, கை, வை, சீ, நீ, போ, பூ, தா, தீ.

பல எழுத்தாலான சொற்கள்.—

கிளி, உரல், கப்பல், பம்பரம், அகஸ்தியர்.

I. பெயர்ச்சொல்.

29. பெயர்ச்சொல் என்றால் என்ன?

ஏதாவது ஒரு பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், ஆகிய இவற்றின் பெயராக வருவது பெயர்ச்சொல்.

பொருளின் பெயர்.—மண், பொன்னன், நாய், கந்தன்

இடப்பெயர்.—காடு, நாடு, மோக்ஷம், மதுரை.

காலப்பெயர்.—மாதம், வாரம், மாசி, ஞாயிறு, நாள்.

சினைப்பெயர்.—கண், கால், இலை, பூ.

குணப்பெயர்.—பசுமை, கருமை, அன்பு, அழகு.

தொழில்பெயர்.—ஆட்டம், ஓட்டம், பாடல், வருகை.

குறிப்பு —சினைப்பெயர் = உறுப்புப்பெயர்.
குணப்பெயர் = பண்புப்பெயர்.

30. *பெயர்ச் சொல்லில், இலக்கணமாகப் பொருந்தியிருப்பவை என்று, எவ்வெவற்றை அறிதல்வேண்டும்?*

பெயர்ச்சொல்லில், திணை, பால், எண், இடம், வேற்றுமை, என ஐந்தை அறிதல் வேண்டும்.

a திணை.

31. *திணையாவது என்ன? எத்தனை? எவ்வாறு வரும்?*

இங்கே திணையென்பது மேல், கீழ், ஜாதிப் பிரிவு. ஆகவே திணை இரண்டு.

1. *பகுத்தறிவுள்ள*—மக்கள், தேவர்-
மேல்திணை அல்லது உயர்திணை.

2. *பகுத்தறிவில்லாத*—மிருகம், மரம், பறவை,
கீழ்த்திணை அல்லது அஃறிணை.

மக்கள், தேவர்—இவர்களின் பெயராக வருவது உயர்திணைப் பெயர்ச்சொல்.

(உ-ம்) ஈசன், பார்வதி, இந்திரன், சுகன், லீலா,

மற்ற உயிர்கள் வஸ்துக்கள்.—இவற்றின் பெயராக வருவது அஃறிணைப் பெயர்ச்சொல்.

(உ-ம்) கழுகு, சிங்கம், மேஜை, கட்டில்.

b. பால்.

32. *பாலாவது என்ன? எத்தனை? எவ்வாறு வரும்?*

பால் என்றால் பகுப்பு. திணையின் உட்பிரிவே பால். அவை,

1. ஆண்பால், 2. பெண்பால், 3. பலர்பால்.
4. ஒன்றன் பால், 5. பலவின் பால்.

என ஐந்து வகைப்படும்.

உயர்திணைப் பெயர்ச் சொற்களை முதல் மூன்று பால்களாகவும் பிரிக்கலாம்.

1. ஆண்பால்.—பிரமன், அரசன், அவன், வேலன்.

2. பெண்பால்.—ஸரஸ்வதி, அரசி, அவள், வள்ளி.

3. பலர்பால்—தேவர், அரசர், அவர், மனிதர்.

அஃறிணைப் பெயர்ச்சொற்களை அடுத்த இரண்டு பால்களாகப் பிரிக்கலாம்.

4. ஒன்றன்பால்.—மாடு, புறு, அது, கல்,

5. பலவின்பால்.—மாடுகள், புறுக்கள், அவை, கற்கள்.

c. எண்.

33. *எண் எனின் யாது? எத்தனை? எவ்வாறு?*

ஒன்றே பலவோ எனப் பொருளின் இலக்கணம் குறிப்பது எண் ஆகும். எண் = எண்ணிக்கை, அளவு.

1. ஒருமை—ஒன்றாயிருக்கும் தன்மையை உணர்த்தும்.

2. பன்மை.—ஒன்றுக்கு மேற்பட்ட பலவாயிருக்கும் தன்மையை உணர்த்தும்.

உ-ம்.	ஒருமை	பன்மை.
	மரம்	மரங்கள்
	கல்	கற்கள்
	வீடு	வீடுகள்
	நாள்	நாள்கள்
	வேடன்	வேடர்
	அரசன்	அரசர்கள்
	பெண்	பெண்கள்
	சிறியது	சிறியவை

34. *ஐம்பால்களையும் ஒருமை பன்மைகளாக வகுத்து உதாரணங் காட்டுக.*

ஒருமைப்பால்	பன்மைப்பால்
1. கள்ளன் (ஆண்பால் உயர்திணை)	1. கள்ளர் (பலர்பால் உயர்திணை)
2. கள்ளி. (பெண்பால் உயர்திணை)	2. களவுகள் (பலவின்பால் அஃதிணை)
3. களவு, (ஒன்றன்பால், அஃதிணை)	

d. இடம்.

35. *இடமாவது என்ன? எத்தனை? எவ்வாறு என்க?*

இங்கே இடம் என்பது சொற்கள் வழங்கும் தானத்தைக் குறிப்பது. இடம் 3, தன்மை, முன்னிலை, படர்க்கை, எனப்படும். பெயர்ச்சொல் எல்லாம் இம்மூன்றில் ஒரு தானத்திற்கே உரியதாகும்.

பேசுவோன் தன்னைக்குறிப்பது—தன்மையிடம்.

முன் நிற்போனைக் குறிப்பது—முன்னிலை இடம்.

புறத்தே இருக்கிறவற்றைக்குறிப்பது—படர்க்கையிடம்.

தன்மைப்பெயர்—ஒருமை-யான், நான், என்னை,

,, பன்மை-யாம், நாம், எம்மை, எங்களை.

முன்னிலைப்பெயர்—ஒருமை-நீ

பன்மை-நீர்

படர்க்கைப்பெயர்—ஒருமை—அவன், அவள், அது.

மரம், சிங்கம், ராமன்.

பன்மை-அவர், அவை, மக்கள்,

மனிதர் மிருகங்கள்.

e. வேற்றுமை

36. வேற்றுமை என்றால் என்ன? எத்தனை? எவ்வாறு?

ஒரு பெயர்ச்சொல்லின் கடைசியில் ஓரொரு சிறு சொல் நின்று, அப்பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்தவரும். அச்சிறு சொற்கள், —உருபுகள் எனப்படும். அவைகளே வேற்றுமையாம். அவை ஒன்று முதலாக எட்டு வரையில் எண்ணப்படும்.

1. முதல் வேற்றுமை—இதற்கு உருபு இல்லை. இயல்பாய் வரும் பெயரே, முதல் வேற்றுமை.

உ-ம் இராவணன் தோற்ருன்—தோற்றவன் யார்? இராவணன்.

இத்தக் கேள்வி எழும்புவதற்கு இடமாயும், அதற்கு ஊத்தரவாகவும் நிற்பதாகிய 'இராவணன்' என்ற பெயர் முதல் வேற்றுமை.

இதுஎழுவாய் வேற்றுமை என்றும் வழங்கப்படும்.

2. இரண்டாம் வேற்றுமை —இதன் உருபு. ஐ.
உ-ம். இராமன் வாலியைக் கோன்ருன்.—(ஐ)

கொல்லப்பட்ட பொருள்
இராமனுடைய செயல்பட்ட பொருள் } வாலி.

ஆகையால் இது செயப்படு பொருள் வேற்றுமை என்றும் சொல்லப்படும்.

3. மூன்ரும் வேற்றுமை.—இதன் உருபுகள்
ஆல், ஓடு, உடன்.

வாலி இராமனுல் கோல்லப்பட்டான்.—(ஆல்).
தச்சன் வாளால் மரத்தை அறுத்தான்.—(ஆல்)
தாயோடு மகள் வந்தாள்— (ஓடு).
அரசனுடன் மந்திரி வந்தான்.—(உடன்)

4. நான்காம் வேற்றுமை —இதன் உருபு. கு ஒன்றே.
கடவுளுக்குக் காணிக்கை கோடுத்தான்—(கு)
கூலிக்கு வேலே செய்தான் — (கு)

5. ஐந்தாம் வேற்றுமை—இதன் உருபுகள்
இன், இல், நின்று.

மதுரையின் வடக்கு சிதம்பரம்.— (இன்)
விரல்களில் சிறியது சுண்டு விரல்.— (இல்)
பள்ளிக்கூடத்தினின்று போனான்.—(நின்று)

6. *ஆறாம் வேற்றுமை.*—இதன் உருபுகள்
அது, உடைய.

சாத்தனதுமகன். (அது)
தச்சனுடைய வாள் (உடைய)

7. *ஏழாம் வேற்றுமை.*—இதன் உருபுகள்.
இல், மேல், உள்.

பையில் பணம் இருக்கிறது — (இல்)
கூரைமேல் பருந்து — (மேல்)
பள்ளிக்கூடத்துள் சிறுவர் உண்டு — (உள்.)

8. *எட்டாம் வேற்றுமை.*—இதற்கு உருபுகள் இல்லை.

பெயர்களைக் கூப்பிடும்பொழுது ஏற்படும் விகாரங்களால் இவ்வேற்றுமையை அறியலாகும் ஆதலால் இது விளிவேற்றுமை எனப்படும்.

உ—ம்,

பொன்னா — ஆ — கடைசியில் வந்தது.
கண்ணனே — ஏ — கடைசியில் வந்தது.
மன்னாவோ — ஆ, ஓ — கடைசியில் வந்தது.

37. *தான், தாம், என்னும் படர்க்கைப் பொதுப் பெயர்களும், தன்மை, முன்னிலைப் பெயர்களும் எவ்வாறு வேற்றுமை யுருபுகளை ஏற்கும்?*

படர்க்கைப் பெயர்— தான், தாம் — தன், தம்—எனத் திரிந்து ஏற்கும்.

முன்னிலைப் பெயர்— நீ, நீர்,— { நின், உன் / நும், உம் } ,,

தன்மைப் பெயர். { யான் / யாம்—நாம் } { என், உன். / எம், நம். }

(1) தான் (2) தன்னை (3) தன்ஞல் எனமுறையே ஒட்டிக் கோள்க.

38. விளிக்கக்கூடாத பெயர்கள் அதாவது எட்டாம் வேற்றுமையை ஏற்கக் கூடாத பெயர்கள் எவை?

1. தன்மைப் பெயர்.—யான், யாம், முதலியன.
2. முன்னிலைப் பெயர்—நீ, நீர், ,,
3. சுட்டுப் பெயர்—அவன், இவன், ,,
4. வினுப் பெயர்—எவன், யார், ,,
5. படர்க்கைப் பொதுப்பெயர்—தான், தாம், ,,

39. பெயர்ச் சொல்லில் அறியவேண்டிய திணை, பால் எண், இடம், வேற்றுமை ஆகிய இவைகளின் இலக்கணம் அறிந்து கொண்டாய் அல்லவா? அதைக்கொண்டு கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களுக்குத் தெரிந்தவரையில் பின்வருமாறு இலக்கணம் கூறு.

பத்மாவதி முருகனுடைய புத்தகங்களை எடுத்தாள்.—நான் அவனைக் கண்டேன் நீ கண்டாயா?

பத்மாவதி—ஆள்பெயர், உயர்திணை, பெண்பால், ஒருமை படர்க்கை முதல் வேற்றுமை.

முருகனுடைய—ஆள்பெயர், உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, ஆரும் வேற்றுமை.

நான்—தன்மைப் பெயர் ஒருமை முதல் வேற்றுமை. இவ்வாறு மற்றச் சொற்களுக்கும் கூறுக.

வினைச்சொல்.

40. *வினைச் சொல்லாவது என்ன? எத்தனை வகைப் படும்?*

ஒரு பொருளின் தொழில் நடப்பைப் பற்றித் தெரிவிக்கும் சொல் வினைச் சொல்லாம்.

உ-ம்—நடந்தேன், நடக்கிறேன், நடப்பேன்,

வினைச்சொல் இருவகைப்படும்.—அவை,

1. *தெரிநிலை வினை.*
2. *குறிப்பு வினை.*

41. *தெரிநிலை முற்று என்றால் என்ன?*

தொழிலும் காலமும் தெரியும்படி நிலை கொண்ட வினை தெரிநிலை வினையாம். தவிர அது செய்தவனையும் காட்டும். அதனால் செய்த வனுடைய திணை, பால், இடம், ஆகிய மூன்றை யும் தெரியக்காட்டி முடியும்.

உ-ம் முருகன் படித்தான்.

படித்தான்—என்ற தெரிநிலைவினை முற்றி லிருந்து முருகன் செய்த படித்தல் தொழிலையும், நேற்றோ முன்போ படித்தல் நடந்தது என்றும், ஆன் என்று முடிந்ததினால், படித்தவன் உயர்

திணை, ஆண்பால், படர்க்கை இடத்தான் என்றும் அறிதலாகிறது.

42. குறிப்புவினை முற்று என்பது என்ன?

இவ்வினை தெரிநிலை வினையைப்போல காலத்தையும் செயலையும் தெளிவாகக் காட்டாது குறிப்பாகவே கண்டுகொள்ளச் செய்யும். ஆனால் திணை, பால், இடம், தெரியக் காட்டி முடியும்.

சிவன் மூன்று கண்ணன்—குறிப்புவினை முற்று.

வறுமை கோடிது குறிப்பு—வினை முற்று.

சிவன் எப்போதும் மூன்றுகண்ணன் என்று குறித்தது. உயர்திணை, ஆண்பால், படர்க்கை இடத்தான், என்று அன் என்ற முடிவால் காட்டிற்று.

43. தெரிநிலை வினை காட்டலாகும் காலம் எத்தனை? எவை?

மூன்று காலத்தைக்காட்டும். அவை.

1. இறந்தகாலம் 2. நிகழ்காலம். 3. எதிர்காலம்.
(கடந்தகாலம்) (நடக்கிறகாலம்) (வருங்காலம்)

44. வினைச்சொல்லில் காலங்காட்டும் உறுப்பின் பெயரென்ன? ஏன் அப்பெயர்?

காலங்காட்டும் உறுப்பின்பெயர் இடைநிலை. இவ்வுறுப்பு ஒரு வினைச்சொல்லின் இடையில் நிற்பதால் இடைநிலை எனப்பெயர் பெற்றது.

45 முக்காலங்களேயும் காட்டும் இடை நிலைகள் யாவை?

1. இறந்தகால இடை நிலைகள்—த், ட், ற், இன்.

செய்தான் = செய் + த் + ஆன் ; த் இடைநிலை.
கண்டான் = காண் + ட் + ஆன் ; ட் ,,
சென்ருன் = செல் + ற் + ஆன் ; ற் ,,
அனுப்பினுன் = அனுப்பு + இன் + ஆன் ; இன் ,,

2. நிகழ்கால இடை நிலைகள்.--கிறு, கின்று

ஓடுகிறேன் = ஓடு + கிறு + என் ; கிறு இடைநிலை.
விடுகின்ருன் = விடு + கின்று + ஆன் கின்று ,,

3. எதிர்கால இடை நிலைகள்.—ப், வ்,

தின்பாள் = தின் + ப் + ஆள் ; ப் இடைநிலை
தேடுவாள் = தேடு + வ் + ஆள்; வ் ,,

46 ஒரு வினைச் சொல்லில் இடைநிலைக்கு முன் முதலிலும், இடைநிலைக்குப் பின் கடைசியிலும் உள்ள உறுப்புக்களின் பெயர்கள் என்ன?

முதல் நிற்பது—முதனிலை அல்லது பகுதி.
கடைசியில் நிற்பது—கடைநிலை அல்லது விகுதி.

உ–ம்.—

வினை.	பகுதி முதனிலை.	இடைநிலை	விகுதி கடைநிலை.
செய்தான்	செய்	த்	ஆன்
ஓடினுர்	ஓடு	இன்	ஆர்
தின்கிருன்	தின்	கிறு	ஆன்
செல்வேன்	செல்	வ்	ஏன்

47. ஏவல் வினைமுற்று ஆவதென்ன? எவ்வாறு வரும்?

ஏவல் அல்லது கட்டளைப்பொருளைத் தரும் வினைமுற்று ஏவல் வினைமுற்றும். வினையின் பகுதியே ஓசைவேறுபாட்டால் ஏவல் பொருள் தந்து நிற்பதுமாம்.

ஏவல் வினை ஒருமை	ஏவல் வினை பன்மை
ஓடு, ஓடாய்	ஓடுங்கள், ஓடுமின்.
படி, படியாய்	படியுங்கள், படிமின்
நட, நடவாய்	நடவுங்கள், நடமின்.

48. வியங்கோள் வினைமுற்று என்பதென்ன?

மரியாதை அல்லது வாழ்த்துப் பொருளில் வரும் வினைமுற்று வியங்கோள் வினை முற்றும்.

அரசே நீர் வாழ்க
அம்மா அமர்க
ஜலம் பருகுக
நன்கு உறங்குக
ஆசீர்வாதம் தருக

} வாழ்க, அமர்க, பருகுக, உறங்குக, தருக இவை வியங்கோள் வினை முற்றுக்கள்.

(ஏவல்வினை முன்னிலை இடத்துக்கு மட்டும் செல்லும்.)

உ-ம்.—நீ நட, நீ வா, நீங்கள் படியுங்கள்.

வியங்கோள் மூவிடத்தும் ஐம்பாலுக்கும் ஒன்றே செல்லும்.

உ-ம்.—நீ வாழ்க, அவன் வாழ்க, தங்கை வாழ்க தமர் வாழ்க.

49. 'செய்' என்ற வினைப்பகுதி ஐம்பால் மூவிடங்களில் முக்காலத்திலும் தொழில் நடப்பைத் தெரிவிக்கும் வினைமுற்றுக்களாய் வருவதற்கு வாய்ப்பாடு சொல்லு?

படர்க்கை	இறந்தகாலம்	நிகழ்காலம்.	எதிர்காலம்.
ஆண்பால் (அவன்)	செய்தான்	செய்கிருன்	செய்வான்
பெண்பால் (அவள்)	செய்தாள்	செய்கிருள்	செய்வாள்
பலர்பால் (அவர்)	செய்தார்	செய்கிருர்	செய்வார்
ஒன்றன்பால் அது	செய்தது	செய்கிறது	செய்யும்
பலவின்பால் அவை	செய்தன	செய்கின்றன	செய்யும்

தன்மை இடம்.

(ஒருமை)	நான்.	செய்தேன்	செய்கிறேன்	செய்வேன்
(பன்மை)	நாம்	செய்தோம்.	செய்கிருேம்.	செய்வோம்

முன்னிலை இடம்

(ஒருமை)	நீ	செய்தாய்	செய்கிருய்	செய்வாய்
(பன்மை)	நீர்	செய்தீர்	செய்கிறீர்	செய்வீர்

50. *தன் வினை, பிறவினை என்றால் எவை?*

தன்னிடத்தே தொழில் நிகழ்தலையுடையது தன்வினை, பிற இடத்து நிகழ்தலுடையது பிற வினை.

உ-ம்:—

தன் வினை	பிறவினை
செய்	செய்வி
ஓடு	ஓட்டு
நடந்தான்	நடத்தினான்
அனுப்பினாள்	அனுப்புவித்தாள்

51. *எச்சவினை என்றால் என்ன? எவ்வாறு நிகழும்? எத்தனை?*

வினைச்சொல் தொழில் நடப்பில் திணை, பால், இடம் காட்டாமல், காலத்தையும் தொழிலையுமட்டும் காட்டிக் குறைவாக நிற்பின், அது எச்சம் எனப்படும். எச்சம் = குறைவு.

உ-ம் :—செய்த, செய்து.

செய்த, செய்து என்னும் எச்சங்கள் குறை வினைகளானபடியால், தனியே நிற்கமுடியாது. எப்படியாவது ஒரு சொல்லால் முடியவேண்டும் அல்லவா? முடியுஞ்சொல்லை நோக்கி, எச்சவினைகள் இரண்டு விதங்களாக வகுக்கப்படும்.

52. *அவை எவை?*

பெயரைக்கொண்டு முடிவது பெயரெச்சம். வினையைக்கொண்டு முடிவது வினையெச்சம்

தெரிநிலை

பெயரெச்சம்	வினையெச்சம்
செய்த கணக்கு	செய்து காட்டினான்.
செய்கிற கணக்கு	செய்யச் சொன்னான்
செய்யும் கணக்கு	செய்தால் காட்டுவான்

53. *குறிப்புப்பெயரெச்ச வினையெச்சங்கள் எவ்வாறு வரும்?*

குறிப்புப் பெயரெச்சம்.	குறிப்பு வினையெச்சம்.
பெரிய பையன்	பெரிதாய்த் தெரிந்தது
இனிய சொல்	இனிதாகப் பேசினான்
நல்ல மனிதன்	நன்றாய்ப் பார்
மெல்லிய நூல்	மெல்லப் பேசு.

54. *எதிர்மறை வினை என்றால் என்ன?*

தொழில் இல்லையென மறுத்துக்கூறுவது.

உ–ம் எதிர்மறை வினை முற்றுக்கள்.

செய்திலன், செய்கின்றிலன் செய்யான்

எதிர்மறைப் பெயரெச்சம்.

படியாத, நடவாத, போகாத, செய்யாத,

எதிர்மறை வினையெச்சம்.

படியாது, நடவாமல், போகாது, போகாமல்,

3. இடைச்சொல்.

55. *இடைச்சொல் என்பது யாது?*

பெயர் வினைகளுக்கு இடையில்வரும் சொல் இடைச்சொல். வேற்றுமை உருபுகளும், உம், ஓ, ஏ, மற்று, முன், பின் முதலியனவும் இடைச் சொற்களாம்.

170497
600 008.

பாண்டியனும் சோழனும்	—உம்	பெயரோடு வந்தது.
படிக்கவோ செய்தாய்	— ஓ	வினையோடு வந்தது.
ஒன்றேகால்	— ஏ	பெயரோடு வந்தது.
மற்றொருவன்	—மற்று	,,
முன் இடம்	—முன்	,,
பின்பார்	—பின்	வினையோடு வந்தது.

4. உரிச்சொல்.

56. *உரிச்சொல் என்றால் என்ன?*

பெயர்ச் சொல் வினைச் சொற்களின் குணத்தை அல்லது தன்மையை உணர்த்தும் பெயர்களாய் வருவது உரிச்சொல்லாம்.

நனி பேதை — நனி—பெயருக்கு உரியதாய் வந்தது.
நனிதுக்கித்தான்—நனி—வினைக்கு உரியதாய் வந்தது.
சால, உறு, தவ, நனி— இவை 'மிகுதி' என்னும் பொருளுக்கு உரிய உரிச்சொற்கள்.

கடி—காப்பு, கூர்மை, அச்சம், முதலிய பொருளுக்கு உரிய உரிச்சொல்.

57. *ஆகவே தமிழ்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?*

4 வகைப்படும். அவை,

	சொல்.	உதாரணம்.
1.	பெயர்சொல்	இராமன், கழுதை, கல்.
2.	வினைச்சொல்	நட, படித்தாள், படித்து,படிக்க.
3.	இடைச்சொல்.	கு, ஐ, ஏ, ஓ, மற்று.
4.	உரிச்சொல்	நனி, தவ, சால, கடி,

III. புணரியல்.

58. *புணர்ச்சியாவது என்ன?*

முதலில் நிற்கும் ஒரு சொல்லின் கடைசி எழுத்தும், அதனை அடுத்துப் பின்வரும் ஓர் சொல்லின் முதல் எழுத்தும் ஒன்றுபடச்சேர்வதே புணர்ச்சியாம்.

(முதலில் நிற்கும் சொல் நிலைமொழி } எனப்ப
அடுத்துப்பின்வரும்சொல் வருமொழி } டும்.

59. *புணர்ச்சி எத்தனை வகைப்படும்:*

இரண்டு வகைப்படும். அவை,

1. இயல்புப் புணர்ச்சி
2. விகாரப் புணர்ச்சி

60. *இயல்புப் புணர்ச்சியாவது என்ன?*

நிலைமொழியின் கடைசியும் வருமொழியின் முதலும் இயல்பாகவே நின்று வேறுபாடு இல்லாமல் புணர்வது இயல்புப் புணர்ச்சியாம்.

மண் + பெரிது = மண்பெரிது.

வில் + வலிமை = வில்வலிமை

61. *விகாரப் புணர்ச்சியாவது யாது? அது எத்தனை வகைப்படும்?*

நிலைமொழியின் கடைசியும் வருமொழியின் முதலும் எழுத்துக்களில் பல வேறுபாடுகள் அடைந்து புணர்வதாம். அவ்விகாரங்கள்

1. தோன்றல், 2. திரிதல், 3. கெடுதல்.
என மூவகைப்படும்.

62. தோன்றல் விகாரம் என்பது என்ன?

சொற்கள் புணரும்போது புதிய எழுத்துத் தோன்றுமாயின் அது தோன்றல் விகாரம்.

வாழை + பழம் = வாழைப்பழம்—ப் தோன்றினது.
ஆட + சென்றான் = ஆடச்சென்றான்—ச் தோன்றினது

63. திரிதல் விகாரம் என்பதென்ன?

புணர்ச்சியில் ஓரெழுத்து மற்றொரு எழுத்தாக மாறுவது திரிதல் விகாரமாம்.

கள் + குடித்தான் = கட்குடித்தான்—ள—ட ஆயிற்று.
பணம் + கா = பணங்கா—ம்—ங் ஆயிற்று.

64 கெடுதல் விகாரம் எவ்வாறு வரும்?

புணர்ச்சியில் முன் இருந்த எழுத்துக்கள் கெட்டுப்போகப் புணர்வது கெடுதல் விகாரமாம்.

மாம் + வேர் = மாவேர்—ம் கெட்டது.
மனம் + வலிமை = மனவலிமை—ம் கெட்டது.

65. மற்றும் பல விகாரங்கள் வரச் சொற்கள் எவ்வாறெல்லாம் புணரும்?

மணி + அழகு = மணியழகு.
பூ + அழகு = பூவழகு.
மரம் + கிளை = மரகிளை.
ஆடு + கால் = ஆட்டுக்கால்.
வயிறு + வலி = வயிற்றுவலி.

எள் + நெய் = எண்ணெய்
பொன் + தட்டு = பொற்றட்டு.
பொய் + மயிர் = பொய்ம்மயிர்.
பனை + காய் = பனங்காய்.
இ + கரை = இக்கரை.

IV. சொற்றொடரியல்.

66. *வாக்கியமாவது என்ன?*

பெயர் முதலிய சொற்கள் தொடர்ந்து வர; ஒரு முழுக்கருத்தைத்தந்து முடிவதே வாக்கியம்.

67 *ஒரு வாக்கியத்திற்கு அவசியம் வேண்டிய சொற்கள் எவை?*

எழுவாயும் பயனிலையும்.

68. *எழுவாய் பயனிலை என்றால் என்ன? எவ்வாறு வரும்?*

ஒரு விஷயம் எழும்புவதற்கு முதற்காரணமாய் உள்ளது எழுவாய். அதன் செயலைத் தெரிவித்து முடிவது பயனிலை.

மழை பெய்தது—இங்கே,

பெய்தலாகிய விஷயம் எழும்புவதற்குக் காரணமாகிய 'மழை'—எழுவாய்.

எழுவாயாகிய மழையின் செயலைத் தெரிவிப்பதாகிய 'பெய்தது' பயனிலை.

69. *செயப்படுபொருள் என்ன?*

எழுவாயின் செயலையடைந்த பொருள்.

வாலி கோட்டையை இடித்தான்.
இதில் வாலி—எழுவாய்
இடித்தான்—பயனிலை.

வாலியால் இடிக்கப்பட்ட பொருள் கோட்டை ஆதலின் கோட்டை, செயப்படுபொருள்.

70. *எல்லாப் பயனிலைகளும் செயப்படுபொருள் ஏற்குமோ?*

சில ஏற்கும், சில ஏற்கா. மரம் வளர்ந்தது—இதில் வளர்ந்தது என்னும் பயனிலை செயப்படு பொருள் கொள்ளாது. இப்படி செயப்படுபொருள் குறைந்துவரும் வினை செயப்படுபொருள் குன்றிய வினை எனப்படும். தச்சன் மரத்தை வெட்டினன்—இதில் வெட்டினன் என்ற வினைமுற்று மரத்தை என்ற செயப்படு பொருளைக்கொண்டது. இப்படி செயப்படுபொருள் குறையாமல் வரும் வினை செயப்படுபொருள் குன்றுவினை எனப்படும்.

71. *அரசன் கோயிலைக் கட்டினன். இவ்வாக்கியத்திலுள்ள செயப்படுபொருளை முதல்வேற்றுமையில் வைத்துப் பொருள் மாறுமல் சொல்க.*

கோயில் அரசனல் கட்டப்பட்டது.

72. *கட்டு, கட்டப்படு—இவ் வினைகளுக்கு என்ன பெயர்?*

கட்டு—செய்வினை.
கட்டப்படு—செயப் பாட்டுவினை.

73. எழுவாய், செயப்படுபொருள், முதலியவை ஒரு வாக்கியத்தில் மறைந்து வருவதெப்படி?

கடவுளை வணங்கு—வணங்கு என்பது பயனிலை.

யார் வணங்குவது எனின், 'நீ' எனவரும்; ஆதலால் 'நீ' என்னும் எழுவாய் மறைந்து நின்றது.

இராமன் வாசித்தான்—இந்த வாக்கியத்தில் வாசித்தான் என்ற வினையின் செயப்படுபொருள் மறைந்து நின்றது.

74. பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய் பயனிலை, செயப்படுபொருட்களைக் காட்டுக.

1. எல்லாவற்றையும் படைத்தவர் கடவுள்.
2. மாதத்தில் 30 நாட்கள் உண்டு.
3. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
4. நமது அரசர் மிகவும் நல்லவர்.
5. ஒளவியம் பேசேல்.

120497
600 008

Printed at the Velayudham Printing Press. Tuticorin.

எமது பிரசுரங்கள்.

சிறுவர் செய்யுள் தீபிகை.

			ரூ.	அ.	பை.
உலகநீதி	சுடர்	1.	0	3	6
ஆத்திசூடி	„	2.	0	3	6
கொன்றைவேந்தன்	„	3.	0	4	0
வெற்றிவேற்கை	„	4.	0	4	6

இப் புஸ்தகங்கள் பதவுரை, பொழிப்புரை, குறிப்புரை, உதாரணக்கதை முதலியவற்றோடு கூடியது.

எண்சுவடி	...	...	0	1	6

A. V. D. பாக்கியம் பிள்ளை

புஸ்தக வியாபாரம்,

தூத்துக்குடி.

Printed at the Velayudham Printing Press. Tuticorin.